2021 செப்டம்பர் 1]

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண்குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்கப்படுத்திடும் வகையில், தொழில்சார் கல்வி பயின்றிட ரூ.50,000/- மற்றும் பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்திட ரூ.30,000/- நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.486.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.4 மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

மகளிருக்கு அதிகாரப்பகிர்வு அளிப்பதன்மூலம் பாலின சமத்துவத்தை அடைவதே அரசின் கொள்கையாகும்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் செயல்படும் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பெண்களின் பொருளாதார வளர்ச்சி மேம்படுத்தப்பட்டு வருகிறது. இச்சங்கங்களில் 18 வயது முதல் 40 வயது வரை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் 124 மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சங்க உறுப்பினர்கள் தங்களது வாழ்விடத்திலிருந்தே தங்களது வீட்டுப் பணிகளுடன் சேர்த்து பள்ளி குழந்தைகளுக்கான சீருடைகள் தைக்கும் பணியினை மேற்கொள்கின்றனர். இதனால் அவர்களது குடும்ப வருமானம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வளர்ச்சிக்கு துணைபுரிகிறது.

மேலும் 98 மகளிர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 1 திருநங்கையர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கம் சமூக நல இயக்குநர் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன.

இம்மகளிர் தையற் தொழிற்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்மூலம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,

[2021 செப்டம்பர் 1

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகியவற்றின்கீழ் இயங்கும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும் நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுவதுடன், அவர்களின் தினசரி செலவினங்களுக்கு முறையான வருவாயை ஈட்டித் தருகிறது.

தமிழக அரசு திருநங்கையரின் நலனுக்காக சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை உறுதி செய்யும் வகையில் ஒரு தனி தையல் தொழிற் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம்:-

வ. எண்	கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
1	மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	83	80,884
2	எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (தையற் பணியிலும் ஈடுபடுகின்றனர்)	15	4,087
3	இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	25	1,350
4	திருநங்கையர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	1	25
மொத்தம்		124	86,346

2020-2021 ஆம் கல்வியாண்டில் 38.05 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டு, அதற்கான தையல் கூலி ரூ.81.26 கோடி பள்ளிக் கல்வித் துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது.

2.2.5 குறுகிய கால தங்கும் இல்லங்கள்(ஸ்வதார் கிரஹ்)

ஒன்றிய அரசின் பெண்கள் (ம) குழந்தைகள் மேம்பாட்டு துறை 1969 ஆம் ஆண்டில் பெண்கள் (ம) குழந்தைகளை ஒடுக்கப்படுவதிலிருந்து தடுக்கவும், அவர்கள் உயிர் வாழவும், மறுவாழ்வு பெறவும் குறுகிய கால தங்கும் இல்லம் என்ற